உ
வேலுமயிலுந் துணை.

# திருப்போரூர் சந்நிதி முறைத் திரட்டு

[ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் அருளியது]

## பிள்ளைத் தமிழ்

O 26:38-2112.7
N53
59396

### விநாயகர் துதி

காப்பு.

அண்டகோடிகளுடன் றந்தவுடலியாவையு
மரியமறை முதலகலையு
மக்கரமுமெய்ப்பதமு மைங்கலையுமந்திரமு
மானபதகதியும்வாக்கு
மண்டியுண்டாகவரு குண்டலியொடைஞ்சத்தி
மாமுகமெனப்படைத்த

வள்ளிநாயகன்மீது பிள்ளையந்தமிழ்சொலவென்
　　மதியினின் றருள்புரியுமாற்
பண்டைமாமல திமிரம் விண்டுபோகக்கிரண
　　பானுகோடிகளென்னவே
பழவடியரக கமல மலர்துநின்றருளி
　　பரப்பியானந்தமுதவி
விண்டுவேமுதலான வண்டர் மாமுனிவர்நரர்
　　விக்கின மகற்றியாளு
மேன்மைதருபோரூரி னிம்பநீழற்குழவு
　　வேழமுகனிருசரணமே. 1

## காப்புப்பருவம்

சோதிமகரக்குழை செறிசுந்தரத்
　　தோளீராறுடையானைச்
சுருதியிறைக்குந்தண்டையந்தாட்டுணையென்
　　முடியிற்பொறித்தானை
மாதுவளருஞ்சமரபுரி
　　வாழ்வைவானோர்சிகாமணியை
வடிவேலரசைமயிலரசை

வந்துபுறங்காத்தளித்திடுமா
லாதிபகவன் ஞானவடி
வழலிற்பூத்துநித்தியமா
யணிந்தோர் தமக்குவசிகரமா
யருந்தினோர்கட்காரமுதாய்
நீதியறியும் பசுமலத்தை
நீக்குமொருநற்குறிகாட்டி
நிகழ்பேரின்பக்கடலூட்டி
நின்றபுகழ்வெண்டிருநீறே. 2

## செங்கீரைப்பருவம்

மும்மையுலகெங்கும்பரந்தொளிபரப்பிடு
முதற்பரையெடுத்தணைத்து
மூதருட்புனிதநீர்நிறையவாட்டிப்பெருமை
மொய்த்தநித்தியவாடையான்
மெய்ம்முழுதுமொத்தியிருவேறற்றவத்துவித
வெண்ணீறணிந்துமிளிரும்
வீறுபூரணநிலப்பொட்டுமிட்டுப்பெரிய
மெய்ஞ்ஞானதீபதட்டா

லம்மருவுமாலத்திசுற்றிமற்றிச்சையுட
ஞனஞானங்கிரியையென்
றருள்செவிலியாயரங்கருகிலுறவாரு
றகன்றசிவ வாரியிலெழுஞ்
செம்மையாரமுதம்புகூட்டவளருங்குழவி
செங்கீரையாடியருளே
திமிரமலமகலவருகுமரசரவணமுருக
செங்கீரை யாடியருளே. 3

## தாற்பருவம்

கஞ்சனையன்று முனிந்துசிவந்தருள்
கையாய்தாலேலோ
காமனைவென்றவர் தோளிலுலாவிய
காலாய் தாலேலோ
மஞ்சன்மகன் கனவின்சொல்வழங்கிய
வாயாய் தாலேலோ
மஞ்சள்வடஞ்செறி குஞ்சரிகொங்கைகொண்
மார்பா தாலேலோ

விஞ்சுறுமன்பினர் பந்தனை கொன்றொளிர்
விழியாய் தாலேலோ
வேடுவர்மங்கை யுளங்குடி தங்கிய
மெய்யாய் தாலேலோ
தஞ்செனவந்த வருஞ்சிடுசமர
புராதிப தாலேலோ
சரவணபவனே குரவணி தருசண்
முகனே தாலேலோ. 4

## சப்பாணிப்பருவம்

பொருநைநதியிற்படிந் திளமரக்காவிற்
புகுந்துசந்தப்பொங்கரிற்
புக்குமணநாறுதென்றற்குழவிவிளையாடு
பொதியப்பொலங்குவட்டிற்
றிரையெறியுமணியாழி யங்கையிலடக்கியஞ்
செந்தமிழ்க்கடல்விரித்துத்
திறமையுடனுறையுமொரு குறுமுனியகத்தினுட்
டிமிரமறமறைமுடிவெனு

மருளொளிபரப்புஞானக்கொழுஞ்சுடர்வைத்த
ஆருனனக்கொண்டலே
யன்பர்வாய்வண்குமுதம்விண்டுதண்டமிழ்நறவ
மாரவெழு மொருமதியமே
தருணவுமைமுககமல மலரவருபரிதியே
சப்பாணிகொட்டியருளே
தடமலையைநிகர்கரிகள் திரிசமரபுரிமுருக
சப்பாணிகொட்டியருளே. 5

கண்ணன்றிருத்தங்கை முலையமுதகட லுண்டு
கனஞான வரையிவர்ந்து
கருதரியசுரர்முதற் பயிர்கள்தழையப்பெருங்
காரவுண மாகணமெலாம்
துண்ணென்றுளஞ்சுறுக் கிட்டுமுறியச்செழுஞ்
சுடர்விடுந்தாரைநெடுவேற்
சோதிமின்மின்னியெழுதீபச்சிகைப்பொருவு
சுடிகைக்கொடுப்பேரிடி
யெண்ணெண்டிசைக்களிறுபிளிறிடவிடித்துமுறை
யின்னருட் பொழியுமுகிலே

யிசைமுழவுபேரிகை வலம்புரிமுழக்கமுட
னெழின்மங்கலச்சும்மையுந்
தண்ணந்துறைப்பரவையோடிகலுபோரூர
சப்பாணிகொட்டியருளே
தகைமைபெறுகுறவனிதைவிழியிணைகள்குடிகொள்புய
சப்பாணிகொட்டியருளே. 6

## முத்தப்பருவம்

இருண்மைப்படலங்கெட நுங்குஞ்சுட
ரெழின்மாணிக்கவரை
யீரைந்துடனக்கிரிவந்தீரா
றிணைவுறுபரிசதெனக்,
கருடத்துவசனுமறிவரியானணி
கடகத்தோள்தழுவிக்
கறையறுமுழுமதியொருபத்தொன்று
கலந்துமகிழ்ந்துறல்போ
லருண்மொய்த்தேர்முகுமுகத்தொடுமுகம்வைத்
தழகியமழலைசொலி

யையனுளங்களிபொங்குறமுத்த
மடிக்கடிதருவாயான்
முருகுற்றெழுநீபத்தொடையழகா
முத்தந்தந்தருளே
முத்தமிழ் நற்சமரப் பதிநாயக
முத்தந்தந்தருளே. 7

## வருகைப்பருவம்

கருத்தேதபுகுந்துகதிகாட்டுங்
கண்ணேவருகமெய்ஞ்ஞானக்
கரும்பேவருககருணைபொழி
காரேவருகவானந்தப்
பெருக்கேவருகயாங்கள்பெறும்
பேறேவருகமறைசொல்கிளிப்
பிள்ளாய்வருகபிறங்குதெய்வப்
பெருமாள்வருககுறமடந்தை
தருக்கேவருகமிடியகற்றுந்
தருவேவருகமன்பதைக்கோர்

தஞ்சேவருகவெமையளிக்குந்
தாயேவருக பவப்பிணிக்கு
மருந்தேவருக சமரபுரி
வாழ்வேவருகவருகவே
மறையின்சிரமெய்ப்பொருளான
வள்ளல்வருகவருகவே. 8

## அம்புலிப்பருவம்

கஞ்சாதனத்தனைச்சிறையிடுவன் முத்தமிழ்க்
கவிஞனைச்சிறைவிடுப்பன்
கடியகுன்றடுவனிருள்கடியுங்குணக்குன்று
கனகும்ப னுக்கருளுவ
னெஞ்சாதகடலழித்தரிவைமுருகாவென்
றிசைக்கவருள்வாரிதருவ
னிகலவுணர்களைகட்டடைந்தகடவுளரெனு
மிரும்பயிர் தழைப்பவைப்ப
னஞ்சாயசமணர்கழுவேறவிட்டடியார்நா
டோறுமீடேறவருவ

னவை தழுவுபுத் தன்முடியிட றியழலடுமென்மை
நளினமங்கைக்கிணைசெய்வ
னஞ்சாதிருந்திடேலிவன்வெகுளிகொளுமுன
மம்புலீயாடவாவே
யருமறையிெனலிநிலவிசமரபுரிமுருகனுட
னம்புலீயாடவாவே. 9

## சிற்றிற்பருவம்

விதையாயிருக்குமைந்தெழுத்தும்
வேதாகமமுழுத்தமிழும்
விளங்குஞ்சரியாதிகணென்கும்
வீறுகியமெய்ச்சிவமதமுஞ்
சுதையாதரிக்குந்திருநீறுஞ்
சோதிநயனத்திருமணியுந்
துகள்தீர்பத்திவிதிநெறியின்
றெடர்புஞ்செடிதீர்மெய்யடியா
ரிதயாலயத்தைதப்பிரியாதாங்
கிருள்தீர்ஞானமணிவிளக்கு
மிலங்குமவுனந்துளும்பாத
இன்பவளனுஞ்சந்ததமுஞ்

சிதையா தளிக்குமோரிறையே
சிறியேஞ்சிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப்போரூரா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே. 10

## சிறுபறைப்பருவம்

ஆறுசமயக்கடவுள்வேறுவேறின்றியா
ஞெருவனேயங்கங்கிருந்
தன்பர்க்குமுத்திதருவித்தென்றியாவர்க்கு
மறிவித்தவதனமணியே
வீறசுரர்துஞ்சுவெஞ்சிறைவிண்டுவானவர்கள்
விண்ணகத்தமுதருந்த
வெற்றிமுரசன்றுனதுசேனைவாரிதியிடை
வியப்புறமுழங்குமுறைபோன்
மாறுபடுகாமாதிவெம்படைகள்துஞ்சிட
மலச்சிறைகழன்றுஞான
மாவிண்ணகத்திருந்தானந்தவமுதெனது
வாய்மடுத்துண்ணவறிவிற்

றேறுமறைநாதமௌனநினதுமுளரிக்கரச்
சிறுபறைமுழக்கியருளே
செறிகலபமயின்முதுகினுதயசின்மயதூய
சிறுபறைமுழக்கியருளே. 11

## சிறுதேர்ப்பருவம்

உலகினெடுசரவசரமெனவையுமாயொன்றினெடு
மொருபற்றிலாதபொருளா
யுறுமறிவையறிவிடத்தெழுகின்றசிற்றசைவி
லுயிருலகுமயலில்பரமு
மிலகுமவையெங்ஙனமெனிற்கருதுமறிவொன்ற
தெழுநினைவுசுட்டுபொருளென்
றிவையோரிரண்டையுமிணைத்தும்பிரித்து
மியக்கிவருபொருளொன்றுமாங்
கலகமுறுமந்தநினைவின்றுகின்முப்பொருளு
மின்றுபரகதியுமிதுவே
காணென்றுகடையேனைவாவென்றுமுடிமீது
கஞ்சமலரடிதரித்தென்

சிலைமனங்கனிசெய் தகுமரசற்குரவனே
சிறுதேருருட்டியருளே
சிமயமொய்த்திடுமிமயமயில்வயிற் றுதயமணி
சிறுதேருருட்டியருளே. 12

## அலங்காரம்

பூமேவுநாபனுநான்முகத்தோனும்புரந்தரனுந்
தாமேவுவாழ்வுமதிகாரமும்பெறத்தார்புனைந்த
கோமேவுவேல்கொண்டவுணரைமாய்த்தகுமரனெங்கோன்
றாமேவுதாண்மலர்போரூரிலென்முடிசூட்டினனே. 13

எல்லார்க்கு மேலவனீ யென் றறிந்துனை யேத்தியன்பாய்ப்
பொல்லாக் கருமலந்தீர்ந் தான் பொதியப் புகழ்முனிவன்
சொல்லாற் புனைதொங்க னக்கீரன் சாத்தித் துனிகடந்தா
னல்லார்க்கு நல்லவ னேசம ராபுரி நாயகனே. 14

கொங்கணராரியரொட்டியர்கோசலர்குச்சரராஞ்
சிங்களர்சோணகர்வங்காளரீழர்தெலுங்கர்கொங்க
ரங்கர்கலிங்கர்கன்னடர் துருக்கரனைவருமே
தங்கள் தங்கட்கிறைநீயென்பர்போரிச்சரவணனே. 15

விருந்துண்டுபின்னைக் குபசாரஞ்செய்யும் விதத்தினத்துப்
பொருந்துஞ்சரோருகத்தேனுண்டுமுத்துமிழ்போரியிலோர்
மருந்துண்டதன்பெயர் செவ்வேளஃதென் மலப்பிணியுந்
திருந்துமுடற்பிணி தன்னையும்போக்கிடுஞ் சித்தமிதே. 16

வண்டுகிண்டக்கஞ்சம்விண்டுதண்டேன்சிந்தவால்வளைகள்
கண்டயின்றின்புறும்போரூர்முருகன்கழலிணைக்கே
தொண்டுவந்தின்புறுவோர்பாததாமரைத்தூளென்
சென்னி
கொண்டுவந்தேதன்மலம்விண்டேன்பரகதிகூடினனே. 17

வல்லைத்துறந்த முலைநுளைமாதர் வளையெறியப்
பல்லைத்திறந்துறு மிக்கவிதாலப் பழமிருக்குந்
தொல்லைத்திருத்திகழ் போரூர்க்குகன் பதஞ்சூடுஞ்
சென்னிக்
கில்லைப்பிரமன் றுயருறக்கிறு மெழுத்துக்களே. 18

மதிகொண்டபூச்சக்ரவாளக்குடையின்வருநிழற்கீழ்த்
துதிகொண்டயானைப்பிடர்மேல்வருமச்சுகந்தனிலு
நதிகொண்டபேரன்பிறைற்போரிவேலனைநண்ணியின்பக்
கதிகொண்ட மேலவர் கால்தலை தாங்கல் கனசுகமே. 19

அளகாபுரியன்னபட்டணத்தேசுதையால்வனைந்த
களவார்முகில்படிமாடத்தினுகளித்தலினும்
புளகாடவியெழுமெய்ப்போரிவேலனைப்போற்றியுய்வார்
வளவார்புறந்திண்ணைவைகுதலே தமின்மாசுகமே. 20

உள்ளக்கவலையெலாமொழிந்தேதெனுழியாதுசெய்யுங்
கள்ளக்கருமங்கள்யாவும்விண்டேன்கலைவாணியுடன்
வள்ளக்கமலமலர்மாது தந்தருள்வாழ் வடைந்தேன்
றெள்ளத்தெளிந்தனன்போரூர்முருகனைச்சேவை
செய்தே. 21

வேதனெங்கேயவன்றுதையெங்கேவிண்ணினண்ணுபுரு
கூதனெங்கேமிகுதேவரெங்கேகுறையாததவப்
போதரெங்கேயறமாதியெங்கேதிருப்போரியில்வாழ்
நாதனெங்கோனவரைப்போலச்சூரையுநாடிடிலே. 22

அருணகிரிப்பெயர்மெய்ஞ்ஞானநாதன்சொல்லால்வனைந்த
பொருணைநதிக்கிரி யான்புகழ்மாலை புனைபுயனே
கருணைமிகுத்தென்னையாண்டாய்க்குமீண்டுகைம்மா
றுளதோ
தருணவளத்தின னேசமராபுரிச் சண்முகனே. 23

026:38.2112.78 N78
57376

மாலோன்விருந்தையை யுண்டாக்கிக் கொண்டிலன்
மாமலரோன், மேலானநன்சிர மொன்றுக்கிக் கொண்டிலன்
மீதுயர்ந்த, நாலாமறைபுகழ் போரூரன்சம்பந்த நாமங்
கொண்டே, நாலாமிடைமயி லாக்கினனென்னை நொடியினிலே.

எண்ணற்கரியசமணக்களைகளைந்தேதமிலாத்
தண்ணுற்றபேரருணீர்பாய்ச்சிச்சைவப்பயிர்வளர்த்து
நண்ணசிவானந்தபோகம்விளைவிக்கநல்லுழவன்
விண்ணுற்றதேவருஞ்சூழ்போரி வாழ்கின்றவேலவனே. 25

தேவருநாகரும் யாவரும்மும் முறைதெண்டனிட
மேவருமாமகுடத்தினிராசிகண் மீதொளிருந்
தூவருமாமணி ராசிகண்மேவித் தொடர்ச்சிவந்த
பூவருதாளினன் போரூர்க்குகனெனும்புங்கவனே. 26

வாரிசுழலவடவரையாதிவரைசுழலக்
காரொடுசந்திரசூரியர்மீன்கறங்காச்சுழலக்
கூரிருள்யாக்கையரக்கர்சுழன்றிடக்கோதில்பச்சைத்
தேரெனவட்டம்வரும்போரிவேலன்சிறைமயிலே. 27

எண்ணியவெண்ணியவாறே சிறியனுக்கீந்தருளும்
புண்ணியனேநின் மகிமையையோர்ந்திலன் பொய்யவனேன்

கண்ணுறும்மாமணியே கருத்தாறுங் கனிரசமே
தண்ணளிமாமுகிலேபோரிமேவிய சண்முகனே. 28

எண்ணிலிகாலத்தின்பின்னரிக்காயமினி தளித்தாய்
நண்ணுறுமீதினுமெய்ப்பத்தியீந்திலைநாயடியேன்
பண்ணியபாவ மென்றேகும் பரகதி யென்றடைவேன்
விண்ணுறு தேவருஞ்சூழ்போரிவாழ்கின்றவேலவனே. 29

திரவணிநீடியபோரூர்கைகூப்பிச்செழுங்கமலச்
சரவணவாவியினீராடித்தங்கச்சதங்கைகொஞ்சுங்
குரவணிபாதம்பணிவோர்க்கினிமைகொடுக்கும்பிரா
னரவணிவோன்குமராவடியேனுன்னடைக்கலமே. 30

## மாலை

நாயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயே னிழைத்த பெரும்பிழையை—நீயே
பொறுத்தாள்வ துன்கடனும் போரூரா வென்னை
யொறுத்தா லெனக்கா ருறவு. 31

இல்லறத்தா னல்லே னியற்கைத் துறவியல்லே
னல்லறத்து ஞானியல்லே னயினேன்—சொல்லறத்தி

னென்றேனு மில்லே னுயர்ந்ததிருப் போரூரா
என்றேநா னீடேறு வேன். 32

மெய்ப்பொருளா நின்னை விரும்பியின்ப மேவாது
பொய்ப்பொருளை நாடியிடர்ப் போந்தேனைச்—செப்பரிய
மட்டழகார் சோலை மலிந்ததிருப் போரூரிற்
கட்டழகா காத்தாள் கடன். 33

இடர்களையு மின்பக் கரும்பை யெமது
தொடர்பிறவி நீக்குந் துணையைத்—தொடர்பாகி
யுள்ளும் புறம்பு மொளிவீசும் போரூரிற்
றெள்ளு மணியை நெஞ்சேசேர். 34

எனக்கவலம் வாராம லெந்நாளுங் காத்து
மனக்கவலை மாற்று மருந்தாம்—புனச்சிறுமி
முத்துவடக் கோடுழுத முந்நான்கு தோளுடையான்
தத்துபுனற் போரூரன் தாள். 35

கண்ணிற் கருமணியே கற்பகமே கற்றோர்க
ளுண்ணிற்குமோரொளியேயோர்பொருளே-யெண்ணிற்கும்
போரூ ரிறையே புனிதநிறை யானந்தச்
சீரூரி னையேனைச் சேர். 36

அன்பெலா நின்பாலே யாக்கி யடியேனுன்
னின்பெலா முண்டிங் கிளைப்பாறக்—கொன்புனைவேற்
கையாதென் போரூரிற் காங்கேயா வீடுதவு
மையாநீ கண்பார்த் தருள். 37

ஏதுபிழை செய்தாலு மேழையேனுக் கிரங்கித்
தீது புரியாத தெய்வமே—நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு. 38

மலைமுழையி லுற்றாலென் மாமருந் துண்டாலென்
கலைமுழுதுங் கற்றாலென் காணா—நிலைநிலவு
வேல்பிடித்த கையான் வியன்போரூ ரையனிரு
கால்பிடித்தாற் காண்பார் கதி. 39

பேய்போந் துயரம்போம் பித்தம்போம் போகாத
நோய்போம் மிடிபோம் நுவலுங்காற்—றாய்போல
நன்னிதியைப் போல நயந்திருப் போரூரன்
சன்னிதியைக் கண்டளவே தான். 40

குமாரநம வென்று கூறினா ரோர்கா
லமரா வதியாள்வ ரன்றி—யமராசன்

கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம். 41

வேலு மயிலும் விளங்குஞ் சிறுசதங்கைக்
காலு மீரா று கனதோளுஞ்—சால
வருளுதவு மாறு முகமுமுள போரூர்ப்
பொருணமது நெஞ்சமே போற்று. 42

அம்புலியே போரூர்வந் தாறுமுகங் கண்டாயோ
நம்புமடி யார்சபையை நண்ணினையோ—வெம்பரனைப்
பண்ணளியாற் பாடினையோ பாற்கடல்போ லேவிளங்குந்
தண்ணளிநிற் கேதுகாண் சாற்று. 43

நோவவுரை யானெம்மை நோவக்கண் பார்த்திடான்
சாவ நினையான் றள்ரவிடான்—பாவனைய
சொல்வாய்க் குறத்தி துணைபிரியாப் போரூர
னல்வாய்ப் பரையனெஞ்சே நாடு. 44

ஆசையு மன்புமபி மானமுமுன து
பூசையிலே வைக்காது பொய்க்காளாய்ப்—பேசரிய
பெண்ணாசை யாதி பிடித்துழன்றேன் போரூரா
வெண்ணாது நின்னை யிருந்து. 45

தீயவனென் குற்றந் திருவுளத்தி னாடாதென்
றாயனைய போரூர்ச் சரவண—தூயசுக
வீட்டுக்குள் வைப்பாய் வினையேனைப் பொய்க்காயக்
கூட்டுக்குள் வைக்கேல் குறித்து. 46

கைவிட்டா னாயனைக் காப்பா ரொருவரில்லை
பொய்விட்டார் போற்றும் புனிதனே—மையிட்ட
கண்ணா ரிருவர் கலந்த புயத்தழகா
தண்ணார் போரூரா தரித்து. 47

மெய்யடியார் போல மிகநடிப்பேன் மெய்யடியார்
பொய்யடிமைத்தொண்டே துஞ்செய் திலேன்—பொய்யடியே
னுன்னாட் கமலபதத் துண்ணிறையப் போரூரா
வெந்நாட் கிடைக்கு மெனக்கு. 48

நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமற்
பாயிற் கிடவாமற் பாவியேன்—காயத்தை
யோர்நொடிக்கு ணீக்கியெனை யொண்போரூ ரையாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து. 49

எப்போது மென்முடியு னின்பத் திருப்பாத
மெய்ப்போதின் கீழிருக்க வேண்டுமே—மெய்ப்போத

வேதா வணங்கவரும் வித்தகா போரூரி
னாதா மயில்வாகனா. 50

கன்றழைக்கு முன்னே கருதிவரு மாப்போல
நின்றழைக்கு நாயேற்கு நேர்தோன்றி—யொன்றினுக்கு
மஞ்சாதே வாவென் றழைப்பாய்தென் போரூரா
வெஞ்சாத பேரருளா லின்று. 51

உண்ணாத போகமில்லை யுற்பவியாக் காலமில்லை
நண்ணாத தேகமில்லை நாயினே—முண்ணாடிப்
பண்டுவந்த துன்பமறப் பார்தொழுபோ ரூரானைக்
கண்டுவந்து நெஞ்சே கருது. 52

## தாலாட்டு

அருணகிரிநாத னருந்தமிழ் நூற்கீரன்
கருணைபெற வோதுங் கவிமாலைத் தோளானே. 53

பிரம னறியாப் பிரணவத்தி னத்த
மரனார் செவிகுளிர வன்றுரைத்த சற்குருவே. 54

அரிவை முருகாவென் றழைக்குமுன் னேவந்து
கரிமுதவி நின்ற கருணைப் பெருந்தேவே. 55

வேலைக் கலைபயின்ற மேதகுபொய் யாமொழிக்குப்
பாலைக் கடையிதென்று பகர்ந்த பெரும்பாவலனே. 56

என்றென்றே தாலாட்டி யெல்லோரு மின்பமுற
நன்றருளே செய்யுமெங்கணுதன் போரூரிறையே. 57

## திருப்பள்ளியெழுச்சி

திருமலிகுண திசையருணனல்லு தயஞ்
செய்தனனிருவினைச்சமமலபாகப்
பருவமதுடையவர் தமதுளமெனவே
பாரகம்விளங்கின வவர் குணக்கிரிமே
லருளொளிவீசிநின் றிலகுமுன்ப தம்போ
லருக்கனுங்குண திசைப் பொருப்பெழுகின்று
னிருளறு குறுமுனி பரவிய போரூ
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே. 58

## கலிவிருத்தம்

அயனாறி வருமோர்மொழி யரனார்க்கருளியவா
மயல்தீர்பரிபுரண்த்திடைவைத்தின்றெனையாளா
யுயர்மாமறைமுடிமீதினிலுறுகாரணசுகமே
செயவேலவ போரூருறை தேவாகுக வேளே. 59

வானோர்தொழு பதியேசடை மன்னன்றரு மதியே
ஞானோதய மகலாதெனை நண்ணும்படி யருளாய்
கோனேயரு ளோனேகுண வானே மயிலோனே
தேனார்பொழிற் போரூருறை தேவாகுக வேளே. 60

இசையொன்றியவியனாடகமணியோதிய புலவா
வசைவின்றியிருந்தென்றான தடி சேர்குவலடியேன்
விசைசென்றிடுமயில்வாகன மிசையேறியகோவே
திசையெண்ணுறு போரூருறை தேவாகுகவேளே. 61

## பெருங்கழி நெடில் விருத்தம்

எண்ணிலாத நெடுங்கால
மெண்ணிலாத பலபிறவி
யெடுத்தேயிளைத் திங்கவைநீங்கி
யிம்மானிடத்தில் வந்துதித்து
மண்ணின் வாழ்க்கை மெய்யாக
மயங்கியுழன்றாலடியேனுன்
மாறாப்பெருமைதரும்பாத
வனசத்துணையென்றடைவேனே

கண்ணின்மணியேயுயிர்க்களியே
கருணைப்புயலே சுகக்கடலே
கச்சித்தாயுச்சியை மோந்து
கண்ணேடணைக்குந் திருத்தாளா
புண்ணியோரெண்ணிய கரும்பே
பொழிமும்மதவாரண முகத்தோன்
பொற்பார்துணையே யற்புதனே
போரூர் முருகப்பெருமானே. 62

## கொச்சகக்கலிப்பா.

பாலுக்குள்வெண்ணெயெழுபான்மைபோலென்னுளத்தில்
சீலத்தைதயெல்லாங்தெளிவிப்பதெந்நாளோ
வேலுக்கரசேவிறன் மாமயிற்கரசே
தாலத்தரசேசமரபுரிநாயகமே. 63

## குறுங்கழி நெடில் விருத்தம்

ஓதியுமுணர்ந்தும் பிறர்தமக்குரைத்து
முளமுதற் றூனடங்காத
பேதையிற்பேதை யாரிலரென்ற
பெரியவர் சொற்கிலக்கானேன்

கோதறுமாறு கொடுமுடிப்பவளக்
குன்றமொத் திலகுகட்டழகா
வேதகோடங்கள் முழங்கிய போரூர்
வீறிவா ழாறுமாமுகனே. 64

பித்தனே னெனினும் பேயனே னெனினும்
பிழைபுரி பாவியே னெனினும்
அத்தனே யெனை நீ யளிக்குதல் கடனே
யறனெலா மோருருக் கொண்டோய்
கொத்தலர் நீபத் தொடையணி மார்பா
குமரநா யகவெனக் குறுதா
வொத்தவா முத்தர் பற்றிய போரூ
ருத்தமா சத்திவே லவனே. 65

பயனில மொழிந்தும் பலதொழில் புரிந்தும்
பரவையிற் றிரையென நினைந்துங்
கயவரிற் பொழுது போக்குறு துனது
கமலத்தா ணினையவே தருவா
யியலிசை யருண கிரிப்பெயர் நாத
னியம்புபா மாலைசேர் புயத்தா

யுயுநெறி யடியேற் குதவிய போரூ
ருத்தமா சத்திவே லவனே. 66

இருளைவிட் டெனைநீ யெடுத்தநாண் முதலா
வின்றுகா றுறுபிறப் பிறப்பி
லுருளெனச் சுழன்றே னிங்கினி தமையு
முயர்பரி பூரணத் திருத்தாய்
மருமலி நீபத் தார்புனை மார்பா
வானவர் சேவித பாதா
தருமலி கரத்தோர் நிறைதிருப் போரூர்ச்
சரவண பிரணவப் பொருளே. 67

உயிர்ப்பிணி தவிர்க்கு மருத்துவ னென்கோ
வுடற்பிணிக் கொருமருந் தென்கோ
மயக்குறு மனத்தி னினைவெனும் பனியை
மாற்றிய கதிரவ னென்கோ
வியப்புறு புரண சொரூபநின் னருளை
வினையனே னேதெனப் புகல்கேன்
கயத்துரி தரித்தோன் புதல்வனே போரூர்க்
காங்கெயா தேங்கொளி மணியே. 68

மாண்செறி யடியார் வேண்டிய வரங்கண்
மாறிடா தளித்திடு முனைப்போற்
காண்கிலே னொருதே மூன்றுல கிடத்துங்
காட்சியாற் கேள்வியாற் றமியேன்
சேண்படு முகிலான் மழைவரு வித்துச்
சிற்றுயிர் காத்தினி தளித்தாய்
கோண்படு சங்க முழங்குறு போரூர்க்
குமரனே யமரர்நா யகனே. 69

## கட்டளைக்கலித்துறை.

அருளேமதமெனக்காட்டியடியரகத்திருந்த
மருளேதுடைத்தமதமாமுகத்தன்மகிழ்துணைவா
தெருளேயடி யெனக்கீதல்வேண்டுஞ் செழுமறையின்
பொருளே மயிலவனே சமராபுரிப் புண்ணியனே. 70

பாதகமெண்ணிலி செய்தேனைவாவென்றுன்பாதகஞ்சப்
போதகமாவலர்மீதுவைத்தோய்நின்புகலடியேன்
காதகங்கொள்ளச்சிவனுக்குநான்முகன் காணவொணாப்
போதகஞ்செய்தவனே சமராபுரிப் புண்ணியனே. 71

மறுமைகுறித்த பயத்தாற்பணிபவர்மத்திமரே
சிறுமைகுறித்துப் பணிவாரதமர்கள் செப்புமிந்த
வுறுமைகுறித்தில தன்பாய்ப்பணிபவருத்தமரே
பொறுமைகுறித்தவர் சூழ்சமரா புரிப்புண்ணியனே. 72

நடிக்குமெய்யன் பரினென்போலிகணிற்க நம்பினற்கே
பிடிக்குளடங்கிடையார்கட் செலாதுளம்பேணி நின்பொன்
னடிக்குளுருகுங்கண்ணீர்வார்ந்துரை தழுத்தங்கமெல்லாம்
பொடிக்குமுரோமஞ் சமராபுரிவரு புண்ணியனே. 73

கோழிக்கொடியை நின்வேலைமயிலைக்குறித்தவரை
யூழிக்கனலுமணுகாதெனினுனையேயடைந்தேற்
காழிப்பவமுளதோவரிவையரப்புசந்தம்
பூழிக்குளுமணக்குஞ் சமராபுரிப் புண்ணியனே. 74

முருகாவெனவுனை யோதுந் தவத்தினர்மூதுலகி
லருகாதசெல்வமடைவார்வியாதியடைந்துநையா
ரொருகாலமுந்துன்ப மெய்தார்பரகதியுற்றிடுவார்
பொருகாலனுடுபுகார் சமராபுரிப் புண்ணியனே. 75

காரார்பிறவிக்கடலைக்கடத்து மென்கன்மனத்தை
நீராயுருக்கு மெனீடுயிர் மூடிநிறைந்திருண்ட

தீராமலப்பிணி தீர்த்திடுமுன்றன் றிருவடியே
தாரார்பொழில்புடைசூழ் சமராபுரிச் சண்முகனே. 76

## நேரிசை வெண்பா

வேதாந்தச் சென்னி மிசையிருக்குந் தெய்வமே
போதானந்தச்சுடரே புண்ணியனே—நாதாந்த
வின்பத்தைக் காட்டி யெனையளிப்பாய் போரூரா
துன்பத்தை யெல்லாந் துடைத்து. 77

சும்மா இருவெனநீ சொல்லப் பொருளொன்று
மம்மாவறிந்திலமென் றன்றுரைத்த—எம்மா
னருணகிரி நாத னநுபவ நாயேற்குக்
கருணைபொழி போரூரா காட்டு. 78

## அடைக்கலப்பத்து

மாண்டுபிறவா நெறியருளு
மன்னுவானோர் முதலெவரும்
வேண்டும்பொருளே பொய்யவனேன்
மெய்யாந்துணையே நாயடியே
னீண்டிங்கிழைத்த குற்றங்க
ளெல்லாம் பொறுத்தே யெளியேனை

யாண்டுகொளல் வேண்டும் போரூ
ரையாவுன்ற னடைக்கலமே. 79

வினையேனிழைத்த பெரும்பிழைகள்
பொறுத்தாட்கொண்ட மெய்த்தேவே
நினையேன்வேறோர் புகலிடமு
மறியேன்சிறியே னின்மலனே
கனமாப்பிறவிக் கடல்கடப்பக்
கழற்றுட்கலனைத் தரல்வேண்டும்
அனையேயனைய போரூரா
அடியேனுன்ற னடைக்கலமே. 80

## விடுபாட்டுகள்

அன்ன மளிக்குமூ ரண்டினரைக் காக்குமூர்
சொன்ன மழைபோற் சொரியுமூ—ருன்னினர்க்குத்
தீதுபிணி தீர்க்குமூர் செவ்வே ளிருக்குமூ
ரோது திருப் போரூரெம் மூர். 81

தேன்பாடும் பூஞ்சோலைத் தென்போரி வேலவனைத்
தான்பாடு மேலோரித் தாரணிக்கே—யான்பாலுஞ்
சோறும் பெறுவார்கள் சொல்லவொண்ணுப் பேரின்பப்
பேறும் பெறுவார்கள் பின். 82

மாதர்யம ஞமவர்த மைவிழியே வன்பாசம்
பீதிதரு மல்குல் பெருநரக—மோதிலதில்
வீழ்ந்தோர்க்கு மேற விரகில்லை போரூரைத்
தாழ்ந்தோர்க்கு மில்லை தவறு. 83

ஈண்டுலகி லுன்னை யிணங்கறியா நாயேனை
யாண்டருள் போரூர் வேலரசனே—மாண்டு
பிறவாமலுன்றன்பதப்பூப்பெருந்தே
னிறைவாவெனக் கருணீயின்று. 84

தீர்த்தஞ்சிவானந்தஞ் செய்யதலமோமாகு
மூர்த்திபரப்பிரம முத்திதருஞ்—சீர்த்த
திருப்போரூருண்மையிதைத் தேர்ந்தபெரியோர்
மருப்போதன்கைப்படார்வந்து. 85

### வாழ்த்து

ஆறுமுகம் வாழி யாறிரண்டு தோள்வாழி
தேறுபதம் வாழியிரு தேவிமார்—வீறுபுடை
வாழிவேல் வாழிமயில் வாழிபோரூரா
வாழிசகம் வாழி மகிழ்ந்து. 86

59396